# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2. தியாகராயா சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்),தேனாம்பேட்டை,
எல்டாம்ஸ் சாலை சந்திப்பு, சென்னை–600 018, தொலைபேசி எண்.24347590.

**ஆணை நாள் – 19.02.2015**

**முன்னிலை**

## திரு. S.F.அக்பர், B.Sc., B.L.,
## மாநில தகவல் ஆணையர்

**வழக்கு எண். 5059/F/2014**

| | | |
|---|---|---|
| திரு.கே.ஜெகநாதன்,<br>த/பெ. கல்லையர்,<br>36/186, வ.உ.சி.நகர், தங்கமாபுரி,<br>பட்டணம், மேட்டூர் அணை–2,<br>சேலம் மாவட்டம். | .. | மேல்முறையீட்டாளர் |
| பொதுத் தகவல் அலுவலர்/மேற்பார்வைப்<br>பொறியாளர் (கொள்முதல் மற்றும் நிர்வாகம்),<br>மேட்டூர் அனல் மின் நிலையம்,<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்<br>கழகம், மேட்டூர் அணை–6, சேலம் மாவட்டம். | .. | பொது அதிகார அமைப்பு |

*****

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று (19.02.2015) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு. கே.ஜெகந்நாதன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் 17.02.2015ஆம் நாளிட்டு ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ள கடிதத்தில், இன்றைய விசாரணைக்குத் தன்னால் ஆஜராக இயலவில்லை எனவும், தனது சார்பாக, திரு.கே.தண்டபாணி, நிர்வாக மேற்பார்வை அலுவலர் திரு.கே.தண்டபாணி, மேட்டூர் அனல் மின் நிலையம், மேட்டூர் அணை, சேலம் மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப் பிரிவு 6(1)ன் கீழ் 30.09.2013–ஆம் தேதியிட்ட கடிதத்தில், மேட்டூர் அனல் மின்நிலையத்தில் களப்பணி உதவியாளராக 16 ஆண்டு காலம் பணிபுரிந்து 31.12.2003ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், அவரது 16 ஆண்டு கால தொடர் பணிக்கு பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளதாகவும், ஓய்வூதியம்

வழங்கிடக் கோரி 15.07.2013ல் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அந்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும், அதற்கான கோப்பின் நகலையும் தகவலாகக் கேட்டிருக்கிறார்.

3. குறித்துரைக்கப்பட்ட கால வரையறைக்குள் தகவல் ஏதும் மனுதாரருக்கு வழங்கப்படாததால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 26.10.2013ஆம் நாளிட்ட தமது முதல் மேல்முறையீட்டை மேல்முறையீட்டு அலுவலருக்கும், அதனைத் தொடர்ந்து தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 01.02.2014 அன்று தமது இரண்டாம் மேல்முறையீட்டை இந்த ஆணையத்திற்கும் அனுப்பி வைத்துள்ளார். மனுதாரர் ஆணையத்திற்கு தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது இன்று (19.02.2015) விசாரணை நடத்தப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 30.09.2013ஆம் நாளிட்டு தாக்கல் செய்த மனுவிற்குத் தகவலாக, 15.07.2013ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாரரின் கோரிக்கை குறித்து சட்ட ஆலோசகர் மற்றும் உட்தணிக்கை அலுவலகம், சென்னை அவர்களிடம் கருத்துரை கேட்கப்பட்டதாகவும், உட்தணிக்கை அலுவலர், தனது 27.01.2015ஆம் நாளிட்ட கடிதம் வாயிலாக, ஓய்வூதிய விதி 43(2)ன்படி, தகுதி பெறும் பணிக்காலம் பத்து வருடங்களுக்குக் குறைவில்லாமல் இருந்தால் மட்டுமே, ஓய்வூதியம் வழங்க மனுதாரர் தகுதி பெற்றவர் ஆவார் என்றும், ஆனால் மனுதாரர் நான்கு ஆண்டுகள் மட்டுமே பணிபுரிந்துள்ளதாகவும், அவர் ஓய்வூதியம் பெற தகுதி பெறவில்லை எனவும், அவருக்கு சேரவேண்டிய பணிக்கொடை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கு இந்த விவரங்கள் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டு விட்டதாகவும் கூறி, அதற்கான ஆதாரங்களை தாக்கல் செய்கிறார். மனுதாரரும் அதனை மறுக்கவில்லை.

4. ஆக, இந்த வழக்கைப் பொறுத்தமட்டில், மனுதாரருக்கு, விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் கொடுக்கக்கூடிய இனங்களுக்கான தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், இம்மேல்முறையீட்டில் மேலும் விசாரிப்பதற்கு ஏதுமில்லையென முடிவு செய்து, இவ்வழக்கு இத்துடன் முடிக்கப்படுகிறது.

**ஒம்/— (எஸ்.எஃப். அக்பர்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். 5059/F/2014</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
மேற்பார்வைப் பொறியாளர் (கொள்முதல் மற்றும் நிர்வாகம்),
மேட்டூர் அனல் மின் நிலையம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
மேட்டூர் அணை–6, சேலம் மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.கே.ஜெகநாதன்,
த/பெ. கல்லையர்,
36/186, வ.உ.சி.நகர், தங்கமாபுரி,
பட்டணம், மேட்டூர் அணை–2,
சேலம் மாவட்டம்.

*jb*